**OS No.34/2017**

PW 3 - அலங்காரம்

நாள் 03.03.2026

**வா.சா.3 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

தாவாச் சொத்தை லெட்சுமனன் மகன் இருளப்பசாமியிடம் கிரயம் பெற்றேன். அவ்வாறு கிரயம் பெறும் போது லெட்சுமனன் பெயரிலோ அவரது மகன் இருளப்பசாமி பெயரிலோ பட்டா இருந்தா என்றால் பட்டா இருந்தது.

நிரூபண வாக்குமூலத்தில் 1995 ம் ஆண்டில் லெட்சுமனன் வேறு ஒரு வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. மேற்படி வழக்கில் லெட்சுமனன் தீர்ப்பு வாங்கியுள்ளார்.

அந்த தீர்ப்பை ரத்து செய்து பிரதிவாதியின் தந்தை உத்தரவு வாங்கிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நீங்கள் கிரயம் வாங்கிய பின்பு சொத்து சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

2014 ல் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் பிரதிவாதி நீங்கள் வாங்கிய சொத்தின் பட்டா செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

உங்கள் பட்டாவை ரத்து செய்து உத்தரவு போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. அந்த உத்தரவை எதிர்த்து வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் ஆமாம். அந்த மேல்முறையீட்டில் உங்களுக்கு எதிராகத் தான் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் இல்லை.

பிரதிவாதிகள் மோசடியாக பட்டா மாற்றம் செய்யாமல் மேற்படி உத்தரவின் அடிப்படையில் தான் பட்டா மாறுதல் செய்தார்கள் என்றால்சரியல்ல.

நீங்கள் கிரையம் வாங்கும் போது பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் தான் பட்டா இருந்தது அதனை மறைத்து நீங்கள் கிரயம் வாங்கியூள்ளீர்கள் என்றால் சரியல்ல.

தாவா இடம் இன்று வரையில் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல என் அனுபவத்தில் உள்ளது. தாவா இடத்தில் பக்கத்து வீட்டுக்காரர்கள் பாதையை அடைத்துவிட்டார் என்றும் அதனை பிரதிவாதிகள் தான் தடுத்தார்கள் என்றால் சரியல்ல.

தாவாச் சொத்து பிரதிவாதிகளின் பூர்வீக சொத்து என்றால் சரியல்ல. நீங்கள் கிரயம் வாங்கியதற்கு பின்பு லெட்சுமனன் தனியாக வழக்கு நடத்தி உங்களுக்கு எதிராக உத்தரவு வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல.

வழக்கில் நீங்கள் கேட்கும் பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**–Sd –**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**–Sd –**
**District Munsif,**
**Manamadurai.**